1970 ஆகஸ்ட் 25]

தாளவாடி பகுதியில் முசுக்கொட்டை மரங்கள் பயிரிடுதல்

*18 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், தாளவாடி பகுதியில் முசுக் கொட்டை மரங்களைபெரிய அளவில் வளர்க்கும் திட்டம் ஏதாகிலும் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) 1967-ம் ஆண்டு, கோயம்புத்தூர், நீலகிரி, தர்மபுரி மாவட்டங்களில் ஒவ்வொரு பெரிய அளவு பட்டுப்பண்ணை ஆரம்பிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது. அந்த மூன்று பண்ணைகளில் கோவை மாவட்டம் தாளவாடி பகுதியில் உள்ள பண்ணை ஒன்ருகும். அப் பண்ணையை 800 ஏக்கர் நிலத்தில் உண்டாக்குவதாக திட்டம். இது வரை 180 ஏக்கரில் முசுக்கொட்டை பயிரிடப்பட்டிருக்கிறது. இன்னும் மூன்ருண்டுக்காலத்தில் இப்பண்ணை முழு வளர்ச்சி அடையும்.

***திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் மூன்று ஆண்டுக் காலத்தில் திட்டம் விரைவுபடுத்தப்படும் என்ருர்கள். 800 ஏக்கர் என்பதைவிட அதிகமான அளவிற்கு பயிரிட அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தாளவாடி, ஹோசூர் பகுதி களில் இந்தச் செடியை வளர்க்க ஆங்காங்கேயுள்ள விவசாயி களுக்கு உதவிகள் அளிக்கப்படுகின்றன. அரசாங்கமும் பண்ணை கள் வைத்திருக்கிருர்கள். தனியார் யார் யார் இந்தச் செடியைப் பயிரிட முயற்சிகள் எடுக்கிருர்களோ, அவர்களுக்கும் உதவிகள் அளிக்கவேண்டும் என்கிற திட்டத்தை டைரக்டர் ஆப் ஹாண்ட் லூம்ஸ், நிறைவேற்றி வருகிருர்கள்.

சென்னை—நாகப்பட்டினம் அரசுப் பேருந்துகள்

*19 வினு திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

சென்னையிலிருந்து நாகப்பட்டினத்திற்குச் செல்லும் அரசுப் பேருந்துகளின் ஓடும் நேரத்தைக் குறைக்க ஏதேனும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே. கிழக்குக் கடற் கரைச் சாலையில் மரக்காணத்திற்குப் போவதில் அருகே பக்கிங் காம் கால்வாயில் பாலம் அமைப்பதால் 15 மைல்களும், சிதம்பரத்

திற்கு அருகே வெள்ளாற்றில் பாலம் கட்டுவதால் 8 மைல்களும், ஆக 23 மைல்கள் சென்னையிலிருந்து நாகை செல்ல குறையும் என்ற நிலை இருப்பதால் அங்கே பாலங்கள் கட்ட அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கிழக்குக் கடற் கரைச் சாலையை மேம்படுத்துவதற்கும், பாலங்கள் கட்டுவதற்கும், மத்திய சர்க்காரை உதவி கேட்டு இருக்கிறோம். முடிவான பதில்கள் எங்களுக்கு வரவில்லை. ஆனாலும், மூல கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

தலைமைச் செயலகத்திற்கு நேரடி போக்குவரத்து வசதிகள்.

*20 வினா—திரு. கரு. சிமைச்சாமி: மாண்புமிகு போதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்தோ, எழும்பூர் ரயில் நிலையத் திலிருந்தோ தலைமைச் செயலகத்திற்கு நேரடி பஸ் வசதி செய்ய அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

பேருந்து வழித்தடங்கள் உரிமம்

*21 வினா திரு. கோளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிதாக பஸ் பர்மிட்டுகள் வழங்குவதில் தற்போதுள்ள விதி முறைகளை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரி சீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேருந்து வழித் தடங்கள் உரிமம் வழங்குவது பற்றிய தற்போது உள்ள விதிமுறை களில் பயனுள்ள மாற்றங்கள் ஏதேனும் செய்யலாமா என்பது குறித்து அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, 15 மைலுக்கு கீழே வழித்தடங்களை வழங்கும்போது, பெரிய பஸ் முதலாளிகள் வைத்திய வசதிகளை வைத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லப்படுகிற விதிமுறைகளை உடனடியாக மாற்று வதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அடிப்படை வசதி கள்தான் வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறார்கள். நான் ஏற் கனவே குறிப்பிட்டதுபோல, அரசு இவற்றையெல்லாம் ஆலோ சித்துக் கொண்டு இருக்கிறது.